**<u>STARTING TIME 11.17 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 74/2025</u>**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 11.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ராஜா Father's Name : சுப்பிரமணி

Address : மாருதிநகர் மற்றும் அஞ்சல்,
காவேரிப்பாக்கம் டவுன் மற்றும் போஸ்ட்,
நெமிலி தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 62

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எவ்வளவு தொகையை திருப்பி தர வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், ரூ.50,000/-க்கும், ரூ.60,000/-க்கும் எழுதிக் கொடுத்த கடனுறுதி சீட்டுக்களின் பேரில் கொடுக்க வேண்டிய பணத்தை திருப்பி செலுத்த வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பிரதிவாதியை எவ்வளவு காலமாக தெரியும் என்றால், சுமார் 10 வருடங்களுக்கு மேலாக தெரியும்.

2. எனக்கும், பிரதிவாதிக்கு ஏற்கனவே பணம் கொடுக்கல், வாங்கல் இருந்ததா என்றால், இருந்தது. அந்த கொடுக்கல், வாங்கலின் போது நான் தான் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தேன் என்றால், சரிதான். பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால், அவருக்கு எந்த வேலையும் இல்லை, ஆனால் அவரது மனைவி ஆசிரியையாக இருந்தார். பிரதிவாதியின் மனைவி உயிருடன் உள்ளாரா

என்றால், அவர் 2, 3 வருடங்களுக்கு முன்பே காலமாகிவிட்டார்.

3. 03.09.2021 அன்று கொடுத்ததாக சொல்லும் தொகைக்கு ஏன் ஒரே கடனுறுதி சீட்டாக எழுதிக் கொள்ளவில்லை என்றால், தொகையை திருப்பி செலுத்துவதற்கு வசதியாக இரண்டு கடனுறுதி சீட்டுக்களை எழுதிக் கொடுத்தார். பிரதிவாதியுடன் ஏற்கனவே கொடுக்கல், வாங்கல் இருந்ததால், அவர் வாங்கிய கடனுக்கான தொகையின் ஒரு பகுதியை திருப்பி செலுத்தினால் அதற்கான மேற்குறிப்பை கடனுறுதி சீட்டில் எழுதலாம் என்றால், சரிதான். அதிக தொகையான இருந்ததால் திருப்பி கொடுப்பதற்கு வசதியாக இரண்டு கடனுறுதி சீட்டுக்கள் எழுதிக் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல.

4. பிரதிவாதி ஏற்கனவே கடந்த 2012–ம் வருடம் ரூ.50,000/–ம் பணத்தை என்னிடம் கடனாக வாங்கினாரா என்றால், சாட்சி முதலில் வாங்கியிருப்பார் என்று சொல்லிவிட்டு, பின்னர் தற்போது நினைவில் இல்லை என்று சொல்கிறார். பிரதிவாதி ஏற்கனவே வாங்கிய கடனை முறையாக திருப்பி செலுத்திவிட்டதால் தான் அதன்பிறகும் பணம் கொடுக்கல், வாங்கல் இருந்தது என்றால், சரிதான்.

5. பிரதிவாதி கடந்த 2012–ம் ஆண்டு வாங்கிய கடனுக்கான வட்டியை பிப்ரவரி 2015 வரை வட்டி செலுத்தி வந்தார் என்றால், அது பற்றி நினைவில் இல்லை, ஆனால் கடனை செலுத்திவிட்ட பிறகு பாண்டை வாங்கி சென்றுவிட்டார். பிரதிவாதி 2012–ம் ஆண்டு வாங்கிய கடனுக்கு 2015–ம் ஆண்டு வரை வட்டி மட்டும் தான் செலுத்தி வந்தார் என்றும், அசலை செலுத்த முடியாததால் 03.09.2021 அன்று அசல் மற்றும் வட்டிக்கு சேர்த்து ரூ.60,000/–க்கு கடனுறுதி சீட்டை எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால், சரியல்ல.

6. பிரதிவாதி அவரது பதிலுரையில் என்ன சொல்லியுள்ளார் என்று தெரியுமா என்றால், அது பற்றி தெரியவில்லை. 03.09.2021 அன்று பிரதிவாதி என்னிடமிருந்து ரூ.50,000/–ம் கடனை வாங்கவில்லை என்றும், 2012–ல் ஆண்டில் வாங்கிய கடனுக்கான வட்டிக்காக தான் ரூ.60,000/–க்கான கடனுறுதி

சீட்டை எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால், சரியல்ல.

7. பிரதிவாதி அவரது பதிலுரையில் என்ன சொல்லியுள்ளார் என்ற விவரத்தை தெரிந்துக் கொள்ள கடமை எனக்கு உள்ளதா, இல்லையா என்றால், உள்ளது. அந்த விவரத்தை ஏன் தெரிந்துக் கொள்ளவில்லை என்பதற்கான காரணம் என்னவென்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

8. தாவாவில் எவ்வளவு வட்டி கேட்டுள்ளேன் என்றால், இரண்டு ரூபாய் வட்டி கேட்டுள்ளேன். பிரதிவாதிக்கு வேலை எதுவும் இல்லை என சொல்லியுள்ள நிலையில் அவ்வளவு வட்டி வீதம் கேட்க இயலாது என்றால், சரியல்ல. பிரதிவாதி 03.09.2021 அன்று ரூ.60,000/-க்கான கடனுறுதி சீட்டை மட்டும் எழுதிக் கொடுத்தது உண்மை என்றும், அந்தப் பணத்தை ரூ.0.75 பைசா வட்டியுடன் திருப்பி செலுத்திவிட தயாராக உள்ளார் என்றால், இரண்டு பாண்டுக்கான பணத்தையும் பிரதிவாதியும், அவரது மனைவியும் வந்து வாங்கி சென்றது உண்மை, அதனால் அந்த இரண்டு பாண்டுக்கான பணத்தை திருப்பி தர வேண்டும். பிரதிவாதியின் மனைவியும் கடனுறுதி சீட்டுக்களில் கையெழுத்து செய்துள்ளாரா என்றால், பணம் வாங்கியவர் என்ற இடத்தில் கையெழுத்து செய்யவில்லை, சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்.

9. ராஜமுத்து யார் என்றால், எனது பங்காளி முறை அண்ணன் ஆவார். பிரதிவாதிக்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றால், காவேரிப்பாக்கத்தில் கீழ் தளத்தில் மூன்று கடைகளும், மேல்தளத்தில் வீடும் உள்ளது. வீடு மற்றும் கடையின் அளவு எவ்வளவு என்று தெரியுமா என்றால், சரியாக தெரியவில்லை. பிரதிவாதி பெயரில் வீடு மற்றும் கடை இருப்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், வீட்டுவரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். நான் அது போன்ற ரசீதுகள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

10. கடந்த 03.09.2021 தேதியன்று பிரதிவாதி ரூ.60,000/-ம் பெற்றுக் கொண்டு அதற்கான கடனுறுதி சீட்டில் மட்டும் தான் கையெழுத்து செய்துக் கொடுத்தார்

என்றும், ரூ.50,000/–ம் மதிப்புள்ள வா.சா.ஆ.2 கடனுறுதி சீட்டில் பிரதிவாதி கையெழுத்து செய்யவே இல்லை என்றால், சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ.2 கடனுறுதி சீட்டில் பிரதிவாதியின் மனைவி சாட்சியாக கையெழுத்தே செய்யவில்லை என்றால், சரியல்ல. எனவே, வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டின் பேரில் சட்ட வட்டியுடன் தீர்ப்பாக வேண்டும் என்றும், வா.சா.ஆ.2 கடனுறுதி சீட்டை பொறுத்து தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME 11.45.A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.11.11 17:06:27 +0530